செ.வெ.எண் : 302 நாள்: 25/5/11

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (25.5.2011) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு பிஷப் கூட்டமைப்பின் தலைவரும், சென்னை - மயிலாப்பூர் ஆர்ச்பிஷப்புமான டாக்டர் எ.எம்.சின்னப்பா அவர்களும் மற்றும் அனைத்து கிறிஸ்தவ சபைகளின் ஆயப் பேரவையினரும் சந்தித்தார்கள். அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றது தங்களுக்கு மகிழ்ச்சியையும், மன நிறைவையும் அளிப்பதாகவும், அது இறைவன் அளித்த நன்கொடை என தாங்கள் வரவேற்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சிறுபான்மை சமூகத்தின் அனைத்து பிரச்சனைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தீர்த்து வைப்பார்கள் என்பதில் தாங்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

அவர்களின் வாழ்த்துகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தச் சந்திப்பின் போது, பேராயர்கள் திரு. லாரன்ஸ் பயஸ், திரு. பிரகாஷ், திரு. ஞானபிரகாஷ், திரு. லெஸ்லி, திரு. மில்டன், திரு. பிராங்க்ளின், திரு. வசீகரன் மற்றும் திரு. சோல் வின்னர் ஆகியோர் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9
நாள்: 25.5.2011